

கவிதை : என் மகன் ! (அன்னையர் தினக் கவிதை)

Written by - ஸ்ரீ ராம் விக்னேஷ், (வீரவநல்லூர், நெல்லை மாவட்டம்) -
Saturday, 11 May 2019 13:17 - Last Updated Sunday, 16 June 2019 01:12

(ஒரு தாயின் நிகழ்காலத் துடிப்பும்,வருங்கால எதிர்பார்ப்பும்)

1.
கட்டிய கணவர் தம்,
மட்டிலா அன்பினால்,
கட்டிப் பொன் : கனியைப் பெற்றேன்! – வாரிக்
கட்டியே முத்தம் இட்டேன்! – சிறு
தொட்டிலில் போட்டவன்,
தூங்கிடும் போதிலே,
தூய்மையாம் தெய்வம் கண்டேன்! – ஒரு
தாய்மையின் உய்வில் நின்றேன்!

2.

எட்டியே பிடித்துமார்,
பற்றியே முகத்தினால்,
முட்டியே பருகக் கண்டேன்! – முகம்
மோதியே மகிழக் கண்டேன்! - தேன்
சொட்டென வாயினால்,
விட்டிடும் வீணிரால்,
சட்டையும் நனையக் கண்டேன்! – மனம்
சாலவே குளிரக் கண்டேன்!

1 / 3

கவிதை : என் மகன் ! (அன்னையர் தினக் கவிதை)

Written by - ஸ்ரீ ராம் விக்னேஷ், (வீரவநல்லூர், நெல்லை மாவட்டம்) -
Saturday, 11 May 2019 13:17 - Last Updated Sunday, 16 June 2019 01:12

3.
தத்தியே தவழ்ந்து பின்,
தளர்நடை போட்டு என்,
தாழ்தனைச் சுற்றிவந் தான் - தன்
தாயெனும் உரிமைகண் டான் ! – நான்
சுத்திய சேலையில்,
தொத்தியே பாய்ந்தவன்,
முத்தென வாய்திறந் தான் !- தன்
சொத்தெனத் தமிழ் உதிர்ந் தான் !

4.
பள்ளியில் கற்றிடப்,
பத்திரம் பண்ணினான்,
பாசமாய் அனுப்பிவைத் தேன் ! – அவன்
படிப்பிலே உயிரைவைத் தேன் ! – எந்தக்
கள்ளியின் நெஞ்சிலும்,
பள்ளிகொள்ளா தவன்,
கல்வியில் கவனம்வைத் தான் - கலையில்
கவுரவப் பட்டம்பெற் றான் !

5.
ஓருமகள் இல்லையே,
எனும்குறை தீர்த்திட,
மருமகள் வரவும்வேண் டும் ! – மகன்
மாலையை இடவும்வேண் டும் ! – நான்
அருமையாய் கொஞ்சிட,
அன்பான பேரனை,
உரிமையாய் தரவும்வேண் டும் ! – மனம்
பெருமையில் நிலவவேண் டும் !

6.

வெள்ளிகள் நடுவிலோர்,
வெண்மதி போலவன்,
வெற்றிகள் காணவேண் டும் ! – கண்டு
பெற்றநான் மகிழவேண் டும் ! – உயிர்
கொள்ளிடக் கூற்றுவன்,
துள்ளியே வந்தபின்,
கொள்ளியை வைத்தால்போ தும் ! – நெஞ்சில்
கோவிலாய்க் கொண்டால்போ தும் !

2 / 3

கவிதை : என் மகன் ! (அன்னையர் தினக் கவிதை)

Written by - ஸ்ரீ ராம் விக்னேஷ், (வீரவநல்லூர், நெல்லை மாவட்டம்) -
Saturday, 11 May 2019 13:17 - Last Updated Sunday, 16 June 2019 01:12

bairaabaarath@gmail.com

3 / 3